யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	காளயுக்தி ஆண்டு சித்திரைத் திங்கள் April—1978	இதழ் 4

கருடன் உருவங் கருதும் அளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.

அரவம் தீண்டிய நஞ்சினை அகற்றுவதற்கு அரவத்தின் பகையான கருட மந்திரத்தைப் பல நாளும் உருவேற்றி கைவரப் பெற்றவர், தீண்டிய இடத்தை உற்று நோக்கிச் செபிக்க நஞ்சு தன்பயன் கெட்டு அகன்றுவிடும்! அதுபோல சிவகுருவின் திருவடி இணையைச் சிந்தித்திருப்பின் மும்மலப் பிணிப்பகன்று அவ்வுயிர் சிவனடிப்பேறு பெற்றுச் சிவனவனாக விளங்கும்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

யோகம் :

மனம் மோட்சத்திற்கும் பந்தத்திற்கும் காரணமாகவுள்ளது. ஆதலால் மனதை செம்மைப் படுத்துவதே யோகமெனப்படும்.

திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

22—5—78 திங்கள் இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும் :

1, யோகாசன ஆலயம் : 16-A, வன்னியர் முதல் தெரு, சூளைமேடு சென்னை-600 094.

2. அருள்மிகு மன்னுர்சாமி கோவில் : மன்னுர்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை-600 013.

3. சுந்தர விநாயகர் கோவில் : சின்னநத்தம், செங்கல்பட்டு.

வேள்விப் பயிற்சி வகுப்பு

ஷ யோகாசன ஆலயத்திலும், செங்கல்பட்டு பெரியநத்தம், பெரியரத்தினத்தெரு எண் 3 லிம் (14–5—78) அன்றும் சென்னை புரசைப்பாக்கம் செல்லப்ப கிராமணி தெரு எண் 13-ல் 21—5—78 அன்றும் காலை 10 மணிக்கு வகுப்புகள் நடைபெறும். யாவரும் கலந்து பயன் பெறுக.

செங்கையில் யோகாசன ஆலயக் கிளைகள்

வேதாந்தவகுப்பு : பிரதி ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, எண் 23, சின்னமணியக்காரத் தெரு, இல்லத்திலும், இரவு 6-30 மணிக்கு சுந்தர விநாயகர் கோவில் தெரு, சுந்தரவிநாயகர் கோவிலிலும் நடைபெறுகிறது.

பிரதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-மணிக்கு செங்கை பெரிய நத்தம் பெரிய ரத்தினத் தெரு, எண் 3, இல்லத்தில் வேதாந்த வகுப்பு பிரதி திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு யோகாசனப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

மகரிஷி தாயுமானவர்

தன்னையொருவர்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

எனக்கென் றிருந்த வுடல் பொருளும்
யானு நினவென் றீந்தவண்ணம்
அனைத்து மிருந்து மிலவாகா
வருளாய் நில்லா தழிவழக்காய்
மனதுட் புகுந்து மயங்கவுமென்
மதிக்குட் களங்கம் வந்ததென்னே?
தனக்கொன் றுவமை யறநிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே!

பதவுரை

தனக்கு-தனக்கு, ஒன்று உவமை அற - ஒருவமையில்லாதவகை, நிறைந்த - வியாபித்த, தனியே! - ஒப்பற்ற பொருளே!, தன்னந் தனி முதலே!, எனக்கு என்று இருந்த - அடியேனுக்கென்று நம்பியிருந்த, உடல் பொருளும் - உடலும் பொருளும், யானும் - நானும், நின என்று-தேவரீருடையன வென்று, ஈந்த வண்ணம் - கொடுத்தபடி, அனைத்தும் இருந்தும் - எல்லா மிருந்தும், இல ஆகா - இல்லாதனவாகா, அருளாய் நில்லாது - அருள்வடிவமாய் நிற்காமல், அழி வழக்காய் - கெடு வழக்காகி, மனத்துள் புகுந்து - மனத்திற் பிரவேசித்து, மயங்கவும் - கலங்கவும், என் மதிக்குள் - என்னறிவுக்குள், களங்கம் வந்தது - களங்கம் வந்ததற்குக் காரணம், என்னே? - யாதோ? அறிகிலேன் என்க.

கருத்துரை

முன் பாடலில் சுவாமிகள், இருள்சூழ்ந்த குடும்ப வலையினுள் சிக்குண்ட ஆசைகளெல்லாம் கையுணவேற்றுண்டால் ஒழிந்துபோம்

என்று கூறியவர் இப்பாடலில், ஒப்புயர்வற்று எங்கும் நிறைந்துள்ள முதல்வனே! உடல், பொருள், ஆவி மூன்றனையும் ஈன்ற பின்னரும் மனேவயப்பட்டு மயங்குமாறு அறிவில் களங்கம் ஏற்பட்டதற்குக் காரணம் என்னே? எனக் கேட்கின்ருர்.

விரிவுரை

உலகிலுள்ள பொருள்களை ஒவ்வொரு உவமையினுல் விளங்க உரைக்கலாம். ஆனுல் பரம்பொருளாம் இறைவனை எந்த உவமை கொண்டு விளக்க முடியும்? அவர்க்கு நிகர் அவரேதாம்! சொல்லுக் கடங்காப் பொருள்; பொருளுக்கும் பொருந்தாத பொருள் ; அளவை களுக்கும் எட்டாப்பொருள்! இப்படித்தான் கூறமுடியுமேதவிர ஒரு பொருளைக்கொண்டு, இன்ன தன்மையது என சுட்டிக்காட்ட ஒண்ணுதது. இதனைத் திறம்பட தெளிவாகக் கூறினுர் தாயுமானுர்; "சொல்லாலும் பொருளாலும் அளவையாலும் தொடர வொண்ணு அருள்நெறி" என்றனர். பொதுமறை "தனக்குவமை இல்லாதான்" என மொழிந்தது!

ஆயின்! சிந்தைக்கும் சொல்லுக்கும் எட்டாததும், வேதத் திலே தர்க்க வாதத்திலே விந்து நாதத்திலே அடங்காததுமான அந்த வான் பொருளை நாடுவதன் பயன் தான் என்னே? எனில், மாறுபா டற்ற (விகற்பமற்ற) நிர்விகற்பச் சுகமாகிய பேரின்பம் பெறுவதற்கே யாம். தாயுமானுரும், முன்னேர்களான ஆழ்வார்கள், நாயன்மார்கள், எண்ணற்ற சித்தர் பெருமக்கள் அனைவருமே இச் சுகத்தையே நாடினர்.

"கற்பதெல்லாங் கற்றேம்முக் கண்ணுடையாய் நின்பணியாய்
நிற்பதுகற் றன்றே நிருவிகற்ப மாவதுவே"

என்பது தாயுமானவரின் திருவாய்மொழி, கல்வியறிவைக்கொண்டு மட்டுமே இச் சுகத்தைப் பெறமுடியாது! குருமார்களிடத்தில் முறைப் படிக் கேட்டுத் தெளிந்து நிட்டை கூடவேண்டும். இது அனுபவத்தில் பெறக்கூடியதேயாகும். கற்ற அறிவைக் கொண்டு மட்டுமே பரம் பொருளைக் கண்டுவிட்டேன் எனில், உள்ளமே சாட்சியாக நின்று குற்றம் என்று அறிவுறுத்துமாம்.

இதனைத் தாயுமான அடிகளாரே கூறுகின்ருர் ;

"கற்றஅறி வாலுனைநான் கண்டவன்போல் கூத்தாடில்
குற்றமென்றென் நெஞ்சே கொதிக்கும் பராபரமே."

ஏட்டுக்கடங்கா எழுத்தறியும் பெருமானையறிய ஐந்தெழுந்தாம் 'நமசிவய'த்தின் உண்மை யோர்ந்து, 'ய' காரத்தில் தன்னையறிந்த பின், 'ஓம்' எனும் ஒப்புயர்வற்ற சொற்பொருளைச் சுருதி, யுக்தி அனு பவ வாயிலாக உணர்தல் வேண்டும். அறிதற்கு அருமையான பரம் பொருளை விளித்துச் சுவாமிகள், "தனக்கொன் றுவமை யற நிறைந்த தனியே தன்னந் தனிமுதலே" என்றனர்.

நாடாளும் மன்னவன் உறைகின்ற இடமும், இறைவனை வழி படச் செல்கின்ற இடமும் கோவில் என்றே வழங்கப்படுகின்றன. "கோ" எனில் மன்னன் எனவும் இல் என்பதற்கு இருப்பிடம் எனவும் பொருள்படும், மன்னனும் தன் அந்தரங்க அறையில் தனித்திருக்

கிறன்; இறைவனும் மூலத்தானத்தில் தனித்திருக்கிறன்; மன்னனைக் காணச் செல்பவர்களுள் மக்கள் அரண்மனை வாயிலுக்கு வெளியே நின்றுவிடுவர். ஊர்ப் பிரமுகர்கள் உட்புகுவர். அவர்களைக் கடந்து அரசு அலுவலர் நுழைவர்; அதற்குமப்பால் உறவினர்; அவர்களையும் கடந்து உரிமையுடைய அரசி! இறுதியில் மன்னன் தனித்திருந்து ஒய்வுபெற தனி அறை இருப்பதுபோல, எங்குநிறை பரம்பொருள் எண் சாண் உடம்புக்குள்ளேயும் தனித்திருக்கிறன்! ஆலயங்களில் இவ் வமைப்பைக் காணலாம். அறுபான்மும்மை நாயன்மார்கள் அல்லது அடியார்களைக் கடந்து உற்சவருக்குமப்பால் மூலவர் வீற்றிருக்கின்றர். அங்ஙனமே சாதகன் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞேயை எனும் ஆதாரங்கள் ஆறும் கடந்து ஏழாம் யோகபூமியில் தனித்திருந்து, தனித்திருக்கும் மூலவரைக் காணவேண்டும்! இந்நிலை வருவதற்குத் தன்னையே தியாகம் செய்யும் தியாகியாக வேண்டும். அதனை இங்குக் குறிப்பிட்ட அடிகளார்; ''எனக்கென் றிருந்த உடல் பொருளும் யானும் நினவென் றீந்தவண்ணம்'' என்றனர்.

உடலையே நாம் எனவும் பொருள்களை நமது எனவும் இறுமாந்து திரிகின்றேம். ஆனல் இறுதியில்? பொருள்களோடு உடலையும் விட்டுச் செல்கிறேம்! ''நடுவன் வந்து அழைத்தபோது நாறும் இந்த நல்லுடல் சுடலைமட்டுங் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரே'' என்று சிவவாக்கியர் கூறியவாறு நம்முடைய உறவுகள் எதுவரை?

மனையாளும் மக்களும் வாழ்வும் தனமுந்தன் வாயின்மட்டே
இனமான சுற்றம் மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவா கினு முன்பு செய்ததவந்
தனையாள என்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே.

என்ற பட்டினத்தடிகளார் கூறியவாறு, உடலில் சீவன் குடியிருக்கும் வரையே அணைத்தும். சீவன் பிரிந்ததும் உடலைத் தீண்டினல் குளிக்கிறேம், உயிரோடு தொடர்வது அவர்கள் செய்த தவத்தின் பயனேயாம்! எனவே நிலையாமையாகிய இவைகளைத் துறப்பதற்கு மனதைப் பண்படுத்தவேண்டும். இதற்கு வழிகாட்டியாக விளங்கும் குருவுக்கு முதலில் உடல், பொருள், ஆவி மூன்றனையும் காணிக்கையாகச், செலுத்திப் பின்னர் சாதனையில் காணும் அனுபவத்திற்குத் தன்னைத் தானே ஒப்படைக்கவேண்டும். இதுவே உண்மைத் துறவாகும்!

''பேசும் எழுத்தென்றும் பேசா எழுத்தென்றும் ஆசான் அருள் புரிந்தால் அஞ்ஞானம் போகுமடி'' என்றதுபோல, குருவருளால் கிடைக்கப்பெறும் அனுபவமாம் தூல, சூக்கும, காரண, மகாகாரணமாக விளங்கும் வத்துவுக்கு நம்மை நாமே தானமாகக் கொடுக்கவேண்டும். அப்போது பரம் பொருள் ஆண்டான்; நாம் அடிமை. தாயுமானரின் அடிப்படைக் கொள்கை ஆண்டான் அடிமை என்பதேயாகும். ''ஆராரெனக்கென்ன போதித்தும்'' என்ற பாடலில்,......... ஆண்டவன் அடிமை என்னும் இரு தன்மையிலும், என் வழக்குத் தீராது விடுவதில்லை'' என்பதைக் காண்க! ''என்னைக் கொடுத்தேனே ஏகாந்தமானேனே'' என்பர் சித்தர் குணங்குடி மஸ்தான்.

ஆண்டானுக்கு அடிமையாகித் தன்னைத்தான் ஒப்புவித்தப் பின் ''சிற்பரமாம் வெளிக்குள் தற்பரமாம் பரதேவதையை'' அஞ்சலி

செய்தனர் தாயுமான அடிகளார். இந்நிலை ஏட்டுக் கல்வியால் வாய்ப்ப தன்று, பரிபூரண அனுபவ நிலையாகும்.

"வானத்தின்மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயி லாச்சுதடி-அக்கச்சி மயில்குயிலாச்சுதடி.
துள்ளலை விட்டுத்தொ டங்கினேன் மன்றுடும்
வள்ளலைக் கண்டேனடி-அக்கச்சி வள்ளலைக்கண்டேனடி.
சாதி சமயச் சழக்கைவிட் டேனருள்
சோதியைக் கண்டேனடி - அக்கச்சி சோதியைக்கண்டேனடி.
பொய்யை யொழித்துப் புறப்பட்டே மன்றுடும்
ஐயரைக் கண்டேனடி-அக்கச்சி ஐயரைக்கண்டேனடி"

இது அருட்பிரகாச வள்ளலாரின் ஆழ்ந்த அனுபவம்! இஸ்லாமிய தருமத்தில் பிறந்து இந்துதருமத்தின் ஒப்பற்ற சாதனைக் கொள்கையைக் கடைப்பிடித்த மஸ்தான்சாகிப் சித்தரின் அனுபவம் இது;

"என்னவித மென்று சொல்லேன் முழக்கம்
முழங்குவ தென்னுக்குள் ளாளே—ஒரு
அன்ன மிருந்தே யழகு பிறக்க
அசைந்தசைந் தாடுவ தாலே—அதன்
முன்னாலே யான்செய்த பாக்கியங் கண்டு
மூன்றுசை யில்லாத தாலே—அது
தன்னாலே யானந்த வெள்ளம் பெருகித்
தடையறப் பாய்வத னாலே—பயிர்
அன்னம் பிடிப்பத னாலே—உனக்
கென்ன குறை லாயிலாக"

இந் நிலையில் அனைத்து அருளாளர்களும் தந்தம் அனுபவத்தைக் கூறிப் போந்தனர். இத்தகையோர்க்குக் குறைவே இல்லை. முழு நிறைவு பெற்றவர் இவர்களேயாவர். "அடிமுடியும் நடுவுமற்றப் பரவெளிமேற்கொண்டால் அத்துவித ஆனந்த சித்தமுண்டாம் நமது குடி முழுதும் பிழைக்கும் ஒரு குறையுமில்லை யெடுத்த கோலமெல்லாம் நனருகுங் குறைவுநிறை வறவே" என்றார் தாயுமானவர். ஆனால் முன் அனுபவமாகிய இப்பாடலில், "என்னை யான் பூரணமாக ஒப்புவித்தப் பினனரும், எல்லாம் இருந்தும் இல்லாத ஏழையாக என் அறிவினை மயங்கச் செய்து மருட்டும் மனோ நிலைக்குள் அகப்பட அறிவில் களங்கம் வந்தது ஏன்?" எனக் கேட்கின்றார்.

"அனைத்தும் இருந்தும் இலவாகா
அருளாய் நில்லா தழிவழக்காய்
மனத்துள் புகுந்து மயங்கவுமென்
மதிக்குட் களங்கம் வந்ததென்னோ?"

காரணம்! "சம்புசிவ சங்கர! சர்வேசா! என்று நான் சர்வ காலமும்" நில்லாமல், "ஆக்கையெனும் இடிகரையை மெய்யென்ற பாவி நான்" என சுவாமிகளின் பாடலே பதில் கூறுகின்றன. ஆற்றின்

கரை, நீரோட்டத்தினுல் அறுக்கப்படுவதுபோல, இடிந்து வீழ்கின்ற கரைக்கு ஒப்பான இவ்வுடலேயே மெய்யென நம்பியிருக்கின்றேனே ! அத்துவித நிலை பெறுவதற்கு நான் ஆசைப்படுவது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதானே! ஆகையால் எனக்கு "அறிவு அவிழ இன்பந் தாக்கும் வகையேது? என, " ஏக்க முறுகின்ருர்.

எட்டாத வத்துவை எட்டிப் பிடிப்பதே சமாதியாகும்!. இந் நிலைக்குச் சரியை கிரியை யோகப் பயிற்சிகளை முறைப்படி தொடர்ந்து பழகுதல் வேண்டும்- பழகிவரின் ! "சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே அல்லும் பகலுமெனக் காசை பராபரமே" என்ற வாறு, உணர்வு ஒன்றுபட்டுச் சும்மா விருக்கச் சுகம் உதயமாகும் ; ஆங்கே யோகம் எனும் பயிற்சியை இவன் செய்ய வேண்டியதில்லை ! திருவருளே கூட்டி வைக்கும்! புறத்தே மாதத்தில் ஒரு திங்கள் காண்பதை எப்போதும் அகத்தே காண்கிருன் !

இங்ஙனம் இருக்க என் மதி (அறிவு)க்குள் களங்கம் வருவானேன் ? என்பதே அடிகளாரின் வினு. மதி (அறிவு) மதியை (சந்திரனை)க் காண்பதே அனுபவம்! மேகக்கூட்டங்கள் சந்திரனை மறைப்பது போன்று, அறிவு களங்கப்படும்போது அனுபவத்தில் தோன்றிய சந்திரன் மறைந்தபோது நெருப்பிலிட்டப் புழுவன்ன துடிப்பர் சாதகர்! மனம் சலனப்பட்டவுடன் அறிவில் களங்கம் ஏற்படும். எனவே முதலில் சரியை முதலான பயிற்சிகளினுல் மனதைப் பண்படுத்தி ஒருமை நிலை செய்த பின்னர் உணர்வை ஒன்றுதிரட்டி நின்ற பின்னரே வெட்டவெளி எனும் சூனிய நிலைக்கு வந்து ஒளிகாணும் ஒப்பற்ற அனுபவத்திற்கு வரமுடியும்! பின்னரும் அனுபவங்கள் பல உள. படிகள் பல கடந்து மலையேறி உச்சியில் இறைவனைக்காண்பது போன்றே சாதகனும் பல படிகள் கடந்து புதிய புதிய அனுபவங்களைப் பெறுகிருன். அவற்றை உள் (அறிவுக்) கண்ணுல் காண்கின்ருன். இவற்றைப் புராணங்களில் கதைகள் வாயிலாக நமக்குப் போதித்துள்ளனர். கண்ணப்ப நாயனுர் ஊனக் கண் கொடுத்து ஞானக் கண் பெற்ருர். மார்க்கண்டேயரும் ஏகாக்கிர சித்தத்தினுல இயமனை வென்ருர். சாவித்திரி இயமனைத் தொடர்ந்து சென்று சொல்வன்மையினுல் தன் பதியின் உயிரை மீட்டாள். அத்தகைய சாவித்திரியின் கதையைக் காண்பாம்.

அசுவபதி மன்னன் மந்திரநாட்டை ஆண்டுவரும் பேரரசன். மன்னருக்கு என்ன குறை இருக்க முடியும்? செயற்கையான குறைகள் ஏதும் இல்லை; ஆனுல் இயற்கையான குறை ஒன்று இருந்தது. அதுதான் பிள்ளையில்லாக்கலை. மக்கட்பேறு இல்லாவிட்டால் மலடி என்பர்; ஒரே ஒரு செல்வம் இருந்தாலோ? வாழைக்குலை போன்று ஒன்று பெற்று வைத்திருக்கிருள் என்பார்கள் ; பல குழந்தைகள் இருப்பின் "பொலபொலென கலகலென புதல்வரைப் பெறுவீர் காப்பதற்கும் வழியறியீர்" என்ற ஏச்சுக்கு ஆளாகவேண்டும்! எப்படியும் உலகம் குறை கூறியே தீரும்!

மக்கட்பேறு பெறுவதில் ஒருண்மைப் பொதிந்துள்ளதைக் காண்போம். நம்மிடம் கடன் பெற்றிருந்தால் கொடுப்பதற்கென்றேயும், கடன் கொடுத்திருந்தால் வாங்குவதற்காகவுமே மக்களாகப் பிறக்கின்றனர்! ஒரு வகையில் மக்கட்பேறு இல்லையெனில் வருத்த முருமல் மகிழ்ச்சியோடு இறைபணியில் ஈடுபடுவதே சாலச்சிறந்தது.

அசுவபதி மன்னன் இறையருளை வேண்டினான். பிள்ளைக்கலி தீரப் பெண் மகவு பிறந்தது. மகிழ்ச்சியின் மிகுதியால் பெருவிழா கொண்டாடி "சாவித்திரி" என்ற திருப்பெயர் சூட்டினான். சாவித்திரி வளர்ந்து மங்கைப் பருவமடைந்தாள். பெற்றவர்களுக்குக் கவலைப் பெருகுவது இந்நாளில்தான்! மகளுக்கேற்ற கணவன் அமைய வேண்டும்; சீர் சிறப்புகள் ஒழுங்காகச் செய்யவேண்டும்; வாழ்க்கை நல்ல முறையில் அமையவேண்டும்; இப்படிப் பலப்பல கவலைகள் "கூறு நின்ற இடர்க் கவலைக் குடும்பக் கூத்துள் துளைந்து தடுமாறுநின்ற பாவி" என்பர் தாயுமானார். இங்ஙனம் கவலை மிகுதியால் வாட்ட முற்றிருந்த அசுவபதியின் மாளிகைக்கு நாரதர் வருகை தந்தார். அகத்தின் அழகு புறத்தில் தெரியும் என்பதுபோல அசுவபதியின் முக வாட்டத்திற்குக் காரணம் கேட்டார் நாரதர். சாவித்திரியின் அழகுக்கும் அறிவாற்றலுக்கும் ஏற்ற கணவன் எங்கிருக்கிறானோ? இதுவே பெருங்கவலையாக இருக்கிறது என்றார் மன்னர்.

இதற்காக நீர் வருந்த வேண்டியதில்லை! சாவித்திரியின் விருப்பத்தைக் கேளுங்கள்; அவள் விரும்பும் அவர்க்கே மண முடித்தால் எளிதாயிற்று! என்றார் நாரதர்.

அங்ஙனமே சாவித்திரியை அணுகி அன்போடு கேட்டான் அசுவபதி. சாலவ நாட்டு மன்னன் சத்தியவான் மீது மகள் கொண்டுள்ள அளவற்ற அன்பை உணர்ந்தான. நாரதரிடம் இந்த உண்மையைத் தெரிவித்ததும அதிர்ச்சி அடைந்தார்! பகைவரிடம் நாடிழந்து காடு புகுந்திருக்கிறான்! அதுவும் சத்தியவானின் ஆயுள் இனனும் ஓராண்டு தானே! தந்தையோ கண்பார்வையற்றவன்! இவ்வுண்மை தெரியாத சாவித்திரி அவன்பால் அன்பு வைத்தாளே! என்றார் நாரதர். இதைக்கேட்ட அசுவபதியும் கவலையடைந்தவனாய் மகளிடம் இவற்றைக் கூறி, அம்மா நான் வேறிடத்தில் மண முடிக்கிறேன் சத்தியவானை மறந்துவிடு! என்றார்.

அப்பா! அனைத்தும் அறிந்த நீவிர் இங்ஙம் கூறலாமா உள்ளத்தில் ஒருவரைக் கணவனாக ஏற்றபின் மாறுரை மணப்பது முறையாகுமா? கற்புக்கு இழுக்கலவா? என் வாழ்க்கை ஓர் ஆண்டே யானாலும் சரி! அவரையே மணப்பேன்! என்று உறுதியாகக் கூறினாள் சாவித்திரி.

"நாடும் நகரும் நிசானுட்டிய பாளயமும் ஈடுசெயுமோ முடிவில் எந்தாய் பராபரமே" என்ற தாயுமானாரின் கருத்துக் கேற்ப சாவித்திரி நாடு நகர் விரும்பவில்லை! சத்தியவானின் ஆயுளைப் பற்றியும் கவலைப் படவில்லை! பண்பு ஒன்றே பெரிதெனக் கொண்டாள். மகளின் உள்ளத்தை மாற்றவியலாத அசுவபதி அவளின் கருத்துக்கு உடன் பட்டு மனைவி மாளவியோடு மகளை இரதத்திலேற்றிக் கொண்டு சத்தியவான் வசிக்கும் நீரத வனம் நோக்கிப் புறப்பட்டான்.

மந்திர தேசத்து மன்னன் அசுவபதியின் வருகையை அறிந்த சத்தியவானின் தந்தை சாலவபதி வரவேற்று உபசரித்தான். அசுவபதி வந்த காரணத்தைக் கூறியதும் சாலவதி மிகவருந்தினான் அரசே! நாங்களோ நாடிழந்து காட்டில வசிக்கிறோம்; சத்திவானின் ஆயுள் இன்னும் ஓராணடுக்குள் முடியப் போகிறது! இந்நிலையில் தங்கள் மகளின் வாழ்கையைப் பாழாக்க என் மனம் என்ன கல்லோ? தயவு செய்து இம்முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் என வேண்டினான்.

தாங்கள் கூறிய யாவும் அறிந்தே இங்கு வந்தோம், எங்களின் மகள் மன நிறைவே எங்களுக்கும் நிறைவாகும்? மறுக்காமல் இத்திரு மணத்தை முடித்தே தீரவேண்டும்! என அசுவபதி வேண்டவும், சால வபதி மறுக்க இயலாதவனுய் சம்மதித்தான். நன்னுளில் திருமணம் கோலாகலமாக நிறைவேறியது. மணமானபின் கணவனிருப்பிடமே தன்னிருப்பிடம் என்று சாவித்திரி பெற்றோரிடம் விடைபெற்றுக் கணவனேடு நீரத வனத்திற்கே சென்ருள். அரச இன்பத்தில் திளைத் திருந்த சாவித்திரி வனத்தில் எளிய வாழ்க்கை மேற் கொண்டாள். கணவனே கண்கண்ட தெய்வம் எனப் போற்றி பணிவிடை செய்து வந்தாள். கணவனின் ஆயுள் வேண்டி உமையவளைக் குறித்து விரதம் மேற் கொண்டு இடையருது பூசித்தாள்.

ஒருநாள் காய்கனிகள், தருப்பை ஆகியவற்றைக் கொண்டுவர சத்தியவான் சாவித்திரி இருவரும் புறப்பட்டனர். அவைகளைச் சேமித்துக்கொண்டு திரும்பும் வழியில் சத்தியவான் சோர்ந்துபோனுன். களைப்பு மிகுதியால் மரநீழலில் தங்கினுர்கள். மயங்கிய நிலையிலிருந்த சத்தியவானைத் தன் மடிமீது சாய்த்துப் படுக்கவைத்தாள். அந்தக் கணமே சத்தியவானின் ஆவி உடலைவிட்டுப் பிரிந்தது. இயமன் பாசக்கயிற்றைக் கொண்டு தன்னிடம் நெருங்கிவந்து சத்தியவானின் உயிரைப் பிரித்துச்சென்றதைக் கண்டாள் சாவித்திரி. இயமதருமரே! என்ருள். இயமன் வியப்போடு திரும்பிப் பார்த்தான்! உலகில் நாளும் எத்தனைப்பேர் உயிர்களோ சுற்றஞ் சூழ்ந்திருக்கும்போதே இயமன் கவர்ந்து செல்கிருன்! யாராயினும் இயமனைப் பார்த்ததுண்டா? இல்லை! ஏன்? கன்களுக்குப் புலப்படவில்லை. ஏன்? மனுேநிலையில் உள்ளதால் திரை மூடியிருக்கிறது! உணர்வு நிலையில் நின்ருல் புலப்படும்!

"சூத்திரப்பாவை கயிறற்று வீழுமுன் சூட்சக் கயிற்றினைப் பாரடா" என குணங்குடி மஸ்தான் சித்தர் கூறியுள்ளதைச் சிந்திக்க வேண்டும் கற்பின் திறத்தால், தவவலிமையால் கணவனின் உயிரைப் பிரித்த சூட் சுமத்தைக் கண்டாள் சாவித்திரி! மடிமீது கிடந்த கணவனின் சடலத்தைக் கீழே கிடத்திவிட்டு எழுந்தாள். என் கணவனின் உயிரைப் பிரிக்கக் காரணம் என்ன? என்ருள். பெண்ணே! அவன் ஆயுட்காலம் முடிந்தது. என் கடமையைச் செய்தேன் என்ருன் இயமதருமன். என்னிடம் அவரை விட்டுச்செல்! என்ருள் சாவித்திரி. இயலாது என்று கூறிவிட்டுச் சென்ருன் இயமன். பின் தொடர்ந்தாள் சாவித்திரி! என்னுடைய நிலையறிந்து என் கணவனை விட்டுத்தான் செல்லவேண்டும். இல்லையேல்! நான் உன்னைத்தொடர்வேன் என்னையும் அழைத்துச்செல்! என்ருள். அம்மா! உனக்குப் பூவுலகவாழ்க்கை முடிய நாள்கள் இருக்கின்றன திரும்பிச் செல்! என்ருன் இயமன்

ஐயா! அப்படியானுல் என் சந்தேகத்தைத் தவிர்க்கவேண்டும் என்று கோரினுள் சாவித்திரி. "தேவர்கள் அல்லது ஞானிகளின் திருப்பார்வைப் பெற்றவர்களுக்குத் துன்பமேதும் வாரா!" என்று வேதம் முழங்குகிறதே! அது பொய்யாகுமா? என்ருள், அம்மா! வேதவாக்கு பொய்யாகிவிட்டால் உலகில் நீதி ஏது? தருமம் ஏது? என்ருன் இயமன். என் வாழ்க்கையில் பொய்த்துவிடும் என்றே அஞ்சுகிறேன்; என்ருள் சாவித்திரி. விளக்கமாகக் கூறுங்கள் என்ருர் இயமதருமர். தருமத்தின் நடுநிலையாக விளங்கும் தங்களைக்

காணும் பேறுகிடைத்தபின்னும் நான் கைம்பெண்ணுகும்நிலை ஏற்படப் போகிறதே! அவ்வாருகிவிட்டால் வேதம் பொய்யல்லவா? என்ருள். நீ கற்பில் வழுவாத உத்தமப் பெண்! எனவே என் தரிசனம் கிடைத்தது! கணவனின் உயிரைத் தவிர்த்து எதுவாயினும் கேள்! தருகிறேன் என்ருர் இயமன்.

"கற்புறு சிந்தை மாதர் கணவனை அன்றி வேருேர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்கும் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணு னந்த வாழ்வே"

என்ற தாயுமான அடிகளாரின் கருத்து இங்கு காணத்தக்கது. "சிக்கெனப் பிடித்தேன்" என மணிவாசகம் மொழிந்தவாறு சாதகர் ஆசிரியரிடத்தினின்றும் பெற்ற குறிப்பை சாவித்திரியைப்போல விடாப் பிடியாகக் கொள்ளவேண்டும். அவரே கற்பில் சிறந்தவர்! பெண்களுக்கு மட்டுமே கற்பு என்பதன்று! ஆடவர்க்கும் இத்தகைய கற்புஉண்டு! "தாராது தள்ளினும் போகேன்யான்" என்று தாயுமானுர் கூறியவாறு மர்க்கடம் போலப்பற்றவேண்டும். பசுமரத்தில் ஆணியடித்தால் எங்ஙனம் உறுதியுடன் நிற்குமோ? அவ்வாறே சாதகனும் சஞ்சலமாய்ப் புத்தியை நாட்டாமல் நிற்கவேண்டும்.

அதேபோல இயமதருமன் தன் கடமையைச் செய்வதில் யாருக்கும் நிகரற்றவன்! தருமவான் என்ற பெயர் ஏற்படக் காரணம் அதுவேயாம். நடுநிலை வகிக்கும் நீதிமான்! நம்மிடமுள்ள பொருள் கொடுத்தோ நமக்குப் பதிலாக பிறரை அனுப்பியோ அவனை ஏமாற்ற முடியாது;

இருப்பது பொய் போவது மெய் யாரிருந்தும் என்ன? எவரிருந்தும் என் செய்வார்? எமன் வரும் காற்ருேடு பொருள் கொடுத்துப் பிழைப்பையோ? தமரை அனுப்புவையோ? பொய்யுரைத்தாற் சென்றிடுமோ? பிற்கணத்தே வருவேன் உருக்கம் வையும்! ஐயோவென்று அழுதும் விடுவானே? ஊட்டி வளர்த்த உடம்பினெடு கொடுபோகானே? எவருக்கெதுவோ? நிலையிலாப் பொருளுக் கழுவாய் சீச்சீ நீ அலைந்து கெட்டாய் மனமே! செப்புவார் யார் உனக்கு?... இங்ஙனம் இயமனை விடு என்ருலும் விடமாட்டான்! எடு என்ருலும் எடுக்கமாட்டான். அவரவர்க்கு இட்ட கட்டளைப்படி தவருது செய்யும் செம்மையான அதிகாரியாவான்.

இத்தகைய தரும நீதிமானுகிய யமனிடம் இரண்டு வரங்கள் கேட்டாள் சாவித்திரி. அவ்வாறே தருவதாக வாக்களித்தான் இயமன். முதலாவது; தன் மாமனுராகிய சாலவபதிக்குப் பார்வை வேண்டுமென்பது; அடுத்தது; தான் கற்பினின்றும் வழுவாமல் தாயாக வேண்டும் என்பது! சாவித்திரியின் வரங்களைக்கேட்ட இயமன் பெருவியப்படைந்து அவளின் கற்பையும் உறுதியான மனப்பான்மையையும் கண்டு பெருமகிழ்வு கொண்டவனுய், பெண்ணே! நீ என்னையே வென்றுவிட்டாய்! உன் விருப்பப்படியே உன் கணவன் உயிர்த்தெழுவான்! சாலவபதியின் பார்வையும் கிடைக்கப்பெறும் நீ மகிழ்ச்சியோடு நீண்டநாள் வாழ்வாயாக! என வாழ்த்திச் சென்ருன்.

சத்தியவானின் உடல் கிடந்த இடம் நோக்கித் திரும்பிய சாவித்திரி தூங்கி விழித்தெழுவதைப் போலெழுந்த சத்தியவானைக்

கண்டு மகிழ்ச்சியோடு தழுவிக் கொண்டாள். சத்தியவானும் நிகழ்ந்ததைக் கேட்டு சாவித்திரியின் வைராக்கியமும் தன்பால் கொண்ட அன்பையும் வியந்து பாராட்டினுன். பார்வை பெற்ற தன் தந்தையுடன் சென்று பகைவரை வென்று இழந்த நாட்டைக் கைப்பற்றி நீண்ட ஆயுளோடு வாழ்ந்தான்.

இக்கதையினின்றும் உணர்வு பலத்தை பெறுவதே வாழ்வின் குறிக்கோள் என்பது கூறவும் வேண்டுமோ? "உணர்வு எனும் பெரும் பதம் தெரிந்து நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணு வெனும் நாமம்" என்று திருமங்கையாழ்வார் கூறியது நமக்குப் பெரிதும் பயன் தரவல்ல திருவாக்கல்லவா?

சாவித்திரி, தேவ புருடராகிய தங்களைக் கண்டபின்னரும் வேத வாக்கு பொய்த்துவிடுமோ? என அஞ்சி யமதருமரிடம் கூறியது போலவே தாயுமான அடிகளாரும் இப் பாடலில், என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றனையும் கொடுத்த பின்னரும் அருள் நிலையில் நிற்க இயலாமல். எல்லாம் இருந்தும் இல்லாத ஏழையாக இருக்கிறேனே; என ஏங்குகின்றார். "ஊழ்வலியோ? அல்லதுன்றன் திருக்கூத்தோ! இங்கொரு தமியேன் மேற்குறையோ? உணர்த்தாய்! இன்னம்பாழ் அவதிப்பட முடியாது" எனவும் பிறிதோர் பாடலின் வழி கேட்கின்றார்.

சான்றோர் நினைவொன்றும் நினையாமல் நிற்கும் தன் முனைப்பற்ற நிலையில் அருட்காட்சியைக் காண்கின்றனர். அதுமறைந்தபோது தாயைப்பிரிந்த சேயாகக் கதறுகின்றனர். "கன்றுகிக் கதறினோர்க்குச் சேதாவாகக் கனிந்தருளும் தயாபரனுகை இறைவன் அருள்கின்றான் எனவே இப்பாடலில் சுவாமிகளுக்குச் சாதனையின் பொருள் மறைந்த போது ஐயோ! மனதின்வழிச் சென்று அறிவு மயங்கி களங்கம் உறுவதற்கு என்னே காரணம்? என தனக்கு உவமைகூற வியலாத எங்கு நிறை பரம்பொருளைக் கேட்கின்றார்,

*

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

Be moderate for everything, it called great Yoga;
Be punctual for everything, it called great Yoga;
Be positive for everything. it called great Yoga;
Be vital force and salute with the Guru,
it called great Yoga;
Be devoted with the one life and one proper thought,
it called great Yoga;
Be increase the Spiritual word and
increase the Spiritual world within your Self,
it called great Yoga;
Be cultivate the Inner understandings, it called great Yoga;
Be everything and always watch within, it called great Yoga;
Be vigorously work wirhout any tiredness,
it called great Yoga;

Be faithfully and sacrificingly work
for the ONE goal which called the Lord,
it called great Yoga;
Be increase your Self improvements and
stay the razor edge point for the Spiritual path,
it called great Yoga;
Be cut off the bondage of the mine, do have,
yours, ours, belongings, am now full, leave it as it is,
it called great Yoga;
Be find inner satisfaction by the practical way
to gain Inner knowledge,
it called great Yoga;
Be as it is, and is it is, it called great Yoga;
Be simple, humble. noble, it called great Yoga.*

Practice and wake up early mornings.
Writing and reading cannot give great Progress,
Wake up earliear is a great Godly hour,
Wake up and repeat the Lord's name is a great Vitality,
Do to know and leave it to the natures,
Do to know by your-inner-self
Do to know and know to understand by your-self,
Practical and following the real path is YOGA,
Great foundation is important, it means all FAITH,
Faithless work, eating, good companions, all give more
obstacles,
Get one-steady mind and fight with it and find the
FREEDOM,
Guru's grace and practical very important for
ATTAINMENTS,
Without Self-knowledge ever cannot cross the demons,
Without Self-knowledge ever cannot cross the Divination of
BREATH
Without Self-knowledge ever cannot cross the SAMSARA,
Everything needs the Blessings of the GURU & GOD and
PARCTICAL,
Awake, Arise, adapt, accommodate and adjust and be
steady,
Good food, good-thoughts, good books,
good-companionship, good-parents. good-natures,
good-devotions, good-life, good-relations, good-
partnerships, these all never will help you, unless you
faithfully practice the Spiritual-Divine-Life each and
every day,*

YOGASANAS

By Sri R. Meharbabu, B. Sc., M. A., B. T.

(Continued from previous issue)

NYAMAM

Nyama means arrangement or pre arrangement. That is to follow the principles of ancient saints. Any person who follows the school of Brahmacharya etc., may behave according to NYAMA. It does not mean that one who practices Yoga alone has to follow NYAMA. But saints ought to follow the path of Nyama. For convenient sake a day has been divided into three periods. The activities that are to be done in a day should be done according to the time. We know pretty well that one full day counts day and night constituting 24 hours. If we divide it into three parts, each constitutes eight hours. A yogi or sage should give complete rest for eight hours to the soul, senses and mind and get free and undisturbed (without dream) sleep. This kind of sleep should be almost between 8 or 9 p.m and 4 or 5 a.m. In case of deficiency for example about an hour sleep, the same may be compensated during day time say from 2 p.m. to 3 p.m. so as to get eight hours rest.

Yoga Brahmachari who practice Yoga should spend his time for acquiring educational skill, maintaining his health, social service, food, shade and shelter. A Grahastha (family man) should spend eight hours for the welfare of his family, self and society, In the case of Vanaprastha (transition period to leave the family burden) or Sanyasi (who renounce the wordly life) should also work for eight hours for the betterment of his self and society. Rest of the eight hours should be spent fot the benefit of soul. Especially in this aspect, society has a wrong notion. Spiritual skill or the skill of Brahma is being disliked by people especially learned men. There are many reasons for the same. Spiritual skill or the skill of Brahma is the same. Knowing the realism and leading the life accordingly is that skill. Wise people call it 'Philosophy.' We call it Dharma or the Right Path. Others call it religion. meta-physics etc. All these terms explains the same thing. The means or journey that guides the path of spiritual aspect of soul is called religion. In the name of religion crores of people had experienced great many sufferings. With the hope that all roads lead to Rome, people followed different paths and seperated from one another due to difference of opinions and principles, fight with each other and dead for the sake of religion. Due to this even today educated people get disgusted towards the spiritual aspect or the skill of Brahma but it is wrong. Let us discuse the term Dharma. It means All Embracing. All the endowed qualities of knowledge and truth is called Dharma. That is why our sages said;—

Nahi Sathyath paramadharma, Naanru thath pathakam param,
Nahi Sathyath param gnnaam, Dhasmath Sathyam Samasareth!,

Yogi or Sanyasi is a person who spends eight hours a day in the spiritual aspect and does research to know the skill of Brahma. Before I discuss the ihird subject matter of Yoga Asanas I would like to tell one thing. Dharma is the structure for all doings of people in this fine world. They cannot forbid it on any account. If anything done against Dharma it will certainly give him animal spirit. For example, among great things of man, politics is one. It is the basic principle of Dharma which is within the rulings of vast land in which millions of people are present. Let us discuss the third chapter of the subject eight folded Yoga-Asanas. *(To be continued)*

TECHNICAL YOGA COURSE

By Yogasana Alayam at Muthialpet High School.

The course started on Sunday 22nd Jan. 78 in the school premises. The Secretaries of South and North Madras Sri T. S. Kalyanasundaram and Sri S. Murugesapandian, respectively and Sri J. K. Mohanram, and Sri V. A. Gangaraj participated in the inaugural function.

The classes were successfully conducted by Sri V. A. Gangaraj and Sri AdalAzhagan on every Sundays between 7 a.m. and 8 a.m. under the supervision of Sri J. K. Mohanram.

An average of fifty students have utilised the services of Yogasana Alayam. The Head Master and Thiru Rajendran, Physical Training Instructor have extended their co-operation in conducting the classes effectively. The Secretaries of North and South Madras conducted a test on 19—3—78 and selected 4 pupils who have also demonstrated on their School Anniversary Day. They were awarded prizes of 'YOGASANAS' books published by Yogasana Alayam.

The services of Yogasana Alayam was appreciated and the same was read in the School Annual Report. The last class of the course for this academic year was conducted and concluded on 26—3—78.

திருமணம்

யோகாசன ஆலய தட்சிணாமூர்த்தி கோவில் கிளை முன்னாள் செயலாளர் திரு. K. முருகேசனார் அவர்களின் மூத்த மகன் செல்வன் K. M. விவேகானந்தனுக்கும், திரு V. R. கிருஷ்ணசாமி அவர்கள் மகள் செல்வி K. சுலோசனாவுக்கும் 16—4—78 காலை 9 மணிக்கு, இராயபுரம் தொப்பை முதலி தெரு, 'சமுதாய நிலயத்தில்' திருமணம் நிகழ்ந்தது. யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் வேதவேள்வி வளர்த்தி திருமணத்தை நிகழ்த்தி மணமக்களை வாழ்த்தினர்.

மகரிஷி தாயுமானவர் திருநாள்



மனைவி உயர்திரு இராமகிருஷ்ண முதலியார், இந்துசமய அற நிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு M. K. பாலசுப்பிரமணியம் I. A. S. உரை நிகழ்த்துபவர்: யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு சுவாமி அவர்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முதல் நாளில் மகரிஷி தாயுமான வரின் திருநாள் கொண்டாடுவது யோகாசனாலயத்தின் ஒப்பற்ற விழா வாக அமைகிறது. இவ்வாண்டும் (காளயுக்தி) 14—4—78 அன்று சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண் 194, நல்லதம்பி சேதுராமன் திருமணமண்டபத்தில் மாலை 5-30 மணிக்குத் தொடங்கியது. திரு. T. S. கலியாணசுந்தரம் (செயலர்) வரவேற் புரையாற்றினர்.

யோகாசன ஆலய நிறுவனரும் தலைவருமான உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்த னர். தலைமையுரையில் கூறியதாவது; இந்துக்கள், அருளாளரின் நூல்களுள் ஒன்றையேனும் முழுமையாகப் படித்துப் பொருள்விளங்கி அதன்வழி நிற்றல்வேண்டும் என்பதே எம் நோக்கம். அந் நோக்கத் துடனேயே மகரிஷி தாயுமானரின் அருட்பாடல்களைக் கைந்நூலாகக் கொண்டுள்ளோம். முழுமையாகப் படிப்போரின் உள்ளம் தூய்மையும் தெளிவும் அமைதியும் அடையும். ஆன்மாவும் பக்குவப்படும். இளஞ் சிறார்களுக்கு சிறுவயதிலிருந்தே இப் பயிற்சியை அளிப்பதற்காகவே மனனப் பரிசுத்திட்டம் அமைத்துச் செயல்படுத்திவருகிறோம். யாவ ரும் முனைந்து செயல்படுவீராக! என்றனர்.

விழா தொடங்குமுன் பிற்பகல் 3 மணிக்கு 25 முதல் 900 பாடல்வரை மனனஞ்செய்தோரை திருவாளர்கள் C. இராமசாமி, N. குருலிங்கம், A. வெங்கடேசன் ஆகியோர் பரிசீலனை செய்தனர்.

விழா தலைவர் அவர்கள் 1000 பாடல் மனனஞ் செய்தோரை யும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் உயர்திரு M. K பாலசுப்பிரமணியம், I. A. S. அவர்கள் 1450 பாடல்கள் (நூல் முழுவதும்) மனனஞ் செய்தோரையும் தேர்வு செய்தனர்.

பாடல்களை ஒப்புவித்த அனைவர்க்கும் மணலி உயர்திரு இராம கிருஷ்ண முதலியார் அவர்கள் பரிசுகள் வழங்கி உரையாற்றினர். சுருக்கம் வருமாறு; "1941-ல் தொடங்கி யோகாசன ஆலயம் இந்நாள் வரை இவ்வரிய சேவையில் ஈடுபட்டு வருவதைக்கண்டு பெரிதும் பாராட்டுகிறேன். கிடைத்தற்கரிய இவ்வாய்ப்பினைப் பெற்றமைக்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன் " என்றனர்.

உயர்திரு M. K. பாலசுப்பிரமனியம், I. A. S. (இ. ச. அ. ஆட் சித்துறை ஆணையர்) அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். சுருக்கம் வருமாறு; எனக்கு அழைப்பு விடுத்து உங்களைக் காணும் பேற்றினை நல்கியமைக்காக மிக்க நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ கத்தில் சித்தர் பெருமக்கள் எண்ணற்றோர் வாழ்ந்தனர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர். வாழையடி வாழையென வந்துகொண்டே இருக்கின்றனர். நம்முடைய ஊனக்கண்களுக்கு அவர்கள் புலப்படுவ தில்லை. வானொலிப்பெட்டியின் வாயிலாக ஒலியின் அலைகளைப் பிடித் துக் கேட்கின்றோம். டெலிவிஷன் மூலமாக ஒளி ஒலிக்காட்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்கிறோம் அதுபோல சித்தர் பெருமக்களோடு தொடர்பு கொள்ளவும் நம்மை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

மனித வர்க்கம் புறம், அகம் என இரண்டு வகையானது. ஒன்று ஆடம்பரம்; மற்றொன்று ஆன்மீகம் "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்று திருமூலர் பகர்ந்தவாறு யோகாஸன ஆலயத் தினர் ஆன்றோர் வழி நின்று சேவை செய்துவருவது போற்றற்குரியது. வரவும் செலவும் சம நிலையில் இருக்கவேண்டும். அஃதாவது, உட் கொள்ளும் பிராண வாயுவும் வெளிவிடும் கரியமல வாயுவும் சமபங்காக இருத்தல்வேண்டும். இந்நிலை தூங்காமல் தூங்கும் நிலைக்கு அழைத் துச் செல்கின்றது. யோகிகள் இப்பயிற்சியின் மூலமாக தூங்காமலேயே தூங்கினால் பெறும் பயனையடைகின்றனர். இவர்கள் ஐந்து பூதங்களை யும் சீரணிக்கும் பக்குவிகளாகின்றனர். இந் நிலையை யோகாசன ஆலயம் தழுவிச் செல்கிறது. இவ்வாலயம் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து மக்களுக்குத் தொண்டுபுரிய வேண்டும் என வாழ்த்துகின் றேன் என்றனர்;

பரிசு பெற்றவர்கள் வருமாறு :—

25 பாடல் : J. சரஸ்வதி, M. சக்திவேல்; M. பத்மாவதி, திரிபுர சுந்தரி, V. கோதண்டராமன், N. ஈஸ்வரி, கார்த்திகேயன், G. மோகன், சோலை, சண்முகம், T. இராமமூர்த்தி ஆகியோர்.

50 பாடல் : J. ரூபலிங்கம், V. ரமேஷ், J. நிர்மலாதேவி, B. ஸ்ரீவள்ளி, B. வெங்கடேஷ், B. சண்முகசுந்தரம், குமாரி புனிதா, கல்யாணி ஆகியோர்.

100 பாடல் : V. ஜெயராமன், S. சுந்தரராஜ், J. சுரேஷ்பிரபு. V. கோமளவல்லி மேனன், கௌரி ஜீவானந்தன், புனிதவதி, V. நரசிம்மலு, V. பெருமாள், P. K. ஞானம், M. புஷ்பா, R. V, யசோதா, வசந்தா கணேசன், J. கவிதா ஆகியோர்.

200 பாடல்: R. இராஜலட்சுமி, K, R. மணிமேகலை ஆகியோர்.
300 பாடல்: காளீஸ்வரி வைரவன், K. R. பாலசுப்பிரமணியம், V. G. சுமதி ஆகியோர்.
400 பாடல்: M. வசுந்தராதேவி, K. ஜோதிமணி, L. G. ஜெயந்தி, மீராதேவி தியாகராஜன் (விருதுநகர்) ஆகியோர்.
600 பாடல்: N. வத்சலா. **700 பாடல்:** N. மோகனா.
900 பாடல்: பா. ஆழ்வார், G. அண்ணாமலை, K. R. உமாதேவி ஆகியோர்.
1000 பாடல்: இ. ரா. தனபால், T. கனகசபாபதி ஆகியோர்.
1450 பாடல்: (நூல் முழுமையும்) திரு V, அருணாசலம் (Dy. Supdt. of Central Excise Retd.) அவர்கள் திரு பி. வெங்கடேன் (அமைப்பாளர்) நன்றிகூற பிரார்த்தனையுடன் விழா இனிது நிறைவேறியது.

விழா சிறப்புற்று அமைய உதவி புரிந்தோர் வருமாறு:

அழைப்பிதழ் (தமிழ்) : திருமதி செண்பகம் காளியப்பன் (ஆங்கிலம்) திரு. R. இராஜகுரு, நாற்காலிகள் அமைப்பு: கருணாகர்ஸ் பிரதர்ஸ் ஒலிபெருக்கி அமைப்பு: திரு C. சுந்தரேசன். புகைப்படம்: திரு. M, லோகநாதன். தாயுமானவர் நூல் 15 : திரு. A. S. ஆதிநாராயணன். பிரார்த்தனை படங்கள் 3 : திரு J. ஹரிஹரகிருஷ்ணன். மாலைகள் ; திரு G. துளசிங்கம். சுவரொட்டி: திரு P. கணேசன், குளிர்பானம்: திரு N. ஏழுமலை.

யோகாசன ஆலய விழாக்களுக்கு எப்போதும் இடமளித்துதவி வரும் அன்பர் உயர்திரு சேதுராமன் அவர்கள் இவ் விழாவிற்கும் மண்டபத்தை அளித்துதவினர்,

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுவாமிகளின் அருட்தொண்டு !

தாயின் அருளுக்காக சேய் ஏங்குவதுபோல, யோகாசன ஆலய தலைவரும், அருட்பால் ஊட்டி வளர்க்கும் தாயானவருமாகிய மேதகு சுவாமி அவர்களின் வருகையை எதிர்நோக்கியிருநத விருதுநகர் யோகாசன ஆலய அன்பர்கள் 27—2—78 காலை 7 மணிக்கு அன்போடு வரவேற்றனர். திரு C. கோபாலகிருஷ்ணன் M.Com., அவர்கள் தூத்துக்குடி தம் இல்லத்திற்குச் சுவாமியவர்களை யழைத்துச் சென்று சிறப்பு வரவேற்பளித்தார்.

28—2—78 இரவு 6-30 மணி யளவில் தூத்துக்குடி சச்சிதானந்த சபையில், "சத்து, சித்து-ஆனந்தம் எது ?" எனும் பொருளில் அருளுரையாற்றினுர்கள். சபைத்தலைவர் திருமதி பத்மாவதி அவர்கள் வரவேற்பும் திருமதி சரோஜினி நன்றியும் நவின்றனர். சாரதாதேவி சங்கத்தலைவர் திருமதி N. தமயந்தி அவர்கள் சுவாமிகளுக்குச் சிறப்பு வரவேற்பளித்தார்.

1—3—78 பட்டி வீரன்பட்டி உயர்திரு கனகசபாபதி அவர்கள் இல்லத்திலும், தாண்டிக்குடி, கொங்கம்பட்டி ஆகிய மலைகளுக்குச் சென்று அங்கும் பிரார்த்தனை நடத்தினுர்கள்.

3—3—78 அன்று இராஜபாளையம் குருசுவாமி கோவிலில் 'வள்ளித்திருமணம்' வேதாந்த விளக்கவுரை நிகழ்த்தினுர்கள். திருவாளர் பெருமாள் ராஜா அவர்கள் வரவேற்பும் திருவாளர் தனுஷ்கோடி ராஜா அவர்கள் நன்றியுரையும் கூறினர்,

அன்றே முகவூரில் யோகாசன ஆலய கிளையைச் சுவாமிகள் தொடங்கிவைத்து, பக்தி, ஒற்றுமை பற்றி சிறுகதைகள் வாயிலாக விளக்கந்தந்தார்கள். திரு தங்கராஜ் அவர்கள் வரவேற்புரையும், திரு முத்துராஜ் அவர்கள் நன்றியுரையும் கூறினர்,

விருதுநகர் பெரிய காளியம்மன் கோவில் கலியாண மண்டபத்தில், யோகாசன ஆலய கிளை தொடக்க விழாவை முன்னிட்டு 5-3-78 காலை 10 மணிக்கு "வள்ளித் திருமணம்" வேதாந்த சித்தாந்த கருத்துக்களுடன் பேருரை நிகழ்த்தினுர்கள். திருமதிகள் சுலோசனு, தனலட்சுமி ஆகியோர் பிரார்த்தனையும் திருமதிகள் வசந்தாதேவி, ஜானகி ஆகியோர் கடவுள் வணக்கப் பாடல்களும் பாடினர். திருவாளர் நடராஜ நாடார் (செயலாளர்) வரவேற்புரையும் திருவாளர் இராஜசந்திரசேகரன், B A., B.L., நன்றியும் கூறினர். திருமதி து. நாகம்மாள் வாழ்த்துப்பாடல் பாடினுர்.

இரவு 7 மணிக்கு, விருதுநகர். இராமமூர்த்தி வீதி சுந்தரலட்சுமி ஜவுளி மாளிகையில் யோகாசன ஆலய கிளைக்கூட்டம் நடைபெற்றது. சுவாமிகள் "நினைவொன்றும் நினையாமல்" என்ற மகரிஷி தாயுமானவர் பாடலுக்கு விளக்க உரை நிகழ்த்தினுர்கள். திரு நடராஜ நாடார் வரவேற்புரையும் திருமதி T. மீராதேவி நன்றியுரையும் நவின்றனர்.

6–3–78 காலை அருப்புக்கோட்டை ஆலயத்திற்கு அன்பர்கள் சூழச்சென்ற சுவாமிகள் பிரார்த்தனை நிகழ்த்தினுர்கள்.

10–3–78 இரவு 8 மணிக்கு விருதுநகர் இந்து சமய வளர்ச்சிக் கழகத்தில் சுவாமிகளின் அருளுரை நடைபெற்றது, "அருளும் பொருளும்" என்ற தலைப்பில் பல்வேறு கருத்துக்களை வாரி வழங்கினர். கழகத் தலைவர் திருமதி N. பொன்னுவுடையம்மையார் வரவேற்றனர். திருமதி சரஸ்வதி அம்மையார் நன்றி நவின்ருர். திருமதி G. தமயந்தி அம்மாள் இறுதிப் பிரார்த்தனை பாடினர்.

திருமதி மகமாயி அம்மையார் (செயலர் மகளிர்பிரிவு, விருதுநகர்) திருமதி சுந்தர லட்சுமி அம்மையார் ஆகியோர் இல்லங்களில் சுவாமிகள் வேதாந்தவிசாரணை வகுப்பு, மௌனவகுப்புகள் நடத்தினுர்கள். அருள் தாகம்கொண்ட அன்பர்கள் பெருமளவில் கலந்து உள நிறைவு பெற்றனர்.

திருமதி மகமாயி அம்மையார் அவர்கள் சுவாமிகளின் நிகழ்ச்சிகளுக்கு சிறப்புத் தொண்டுபுரிந்தனர்.

தொகுப்பு T. மீராதேவி.

செங்கையில் வேள்வி வகுப்பு தொடக்கவிழா

16—4—78 காலை 10 மணிக்கு செங்கல்பட்டு, பெரியநத்தம், பெரிய ரத்தினத் தெரு, எண் 3, திருவாளர் A. P. ஆனந்தவேலு அவர்கள் இல்லத்தில் தொடங்கியது. திருவாளர் G. கஜமணி, BSc., B.T. (தலைமை ஆசிரியர் சேவா சாதனம் உயர்நிலைப் பள்ளி, தாம்பரம்) அவர்கள் தலைமை வகித்து யோகாசன ஆலய ஒப்பற்ற சேவையை வெகுவாகப் பாராட்டினுர். திரு. C. இராமசாமி (யோகாசன ஆலய பொதுச்செயலாளர்) அவர்கள் வேள்வி வளர்த்தார்கள். திரு A. P. ஆனந்தவேலு நன்றி நவின்ருர்.

ஷ நாள் இரவு 7 மணிக்கு சின்னநத்தம் சுந்தர விநாயகர் கோவில் வேதாந்த வகுப்பில், விருதுநகர் திருமதி மீராதேவி தியாகராஜன் அவர்கள் "அண்ட பகிரண்டமும்" என்ற தாயுமானவர் பாடலுக்குச் சிறப்புரை ஆற்றினுர்கள்.

கல்கி: குதிரை வடிவமாக இனி எடுக்க இருக்கும் திருவவதாரம்

இங்ஙனம் நீதியை நிலைநாட்டி அநீதியை அழிப்பதற்காக இறைவன் பல வேறு வுருவங்கொண்டு வருவதாகப் புராணங்கள் நமக்குப் போதிக்கின்றன. இவற்றைச் சமயநோக்கோடு காணுமல் பொது நோக்காகக் கண்டோமேயானுல் உண்மை தெற்றென விளங்கும். இதுவே யோகாசன ஆலயத்தின் தனிப்பான்மையாகும்,

ஆலயக் கொள்கை ஆறு

புலவர் பா. ஆழ்வார்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

நரசிம்மம் : தேவர், மானிடர், விலங்கு மற்றும் பிராணிகளாலும், ஐம்பெரும் பூதங்கள், ஆயுதங்கள் ஆகிய எவற்ருலும் தனக்கு மரணம் ஏற்படாதவாறு சிவபெருமானிட மிருந்து வரம் பெற்ற இரணியன், தன் மகனே தனக்குப் பகைவனுகப் பிறந்தமை கண்டு பொருமல், நீ கூறும் நாராயணன் இத்தூணில் இருக்கிருனு? என்று கேட்க, "சாணினு முளனேர்தன்மை அணுவினைச் சதகூறிட்ட கோணினு முளன், மாமேருக் குன்றிலுமுளன் இந்நின்ற தூணினுமுளன் நீ சொன்ன சொல்லிலுமுளன்! இத்தன்மை காணுதி விரைவில்" என்ருன் பிரகலாதன். கேட்டதும் எல்லையற்ற சினங்கொண்ட இரணியன் தூணைப் புடைக்க அதனின்றும் மகாவிஷ்ணு. மானிடவடிவாகவுமல்லாமல் விலங்குமல்லாமல் நரசிம்ம வடிவந்தாங்கி ஆயுதங்களின்றி கைந்நகங்களினுலேயே இரணியனின் மார்பைப் பிளந்து அழித்தார்.

வாமனன் : மகாபலி எனும் அசுரமன்னன் தான் பெற்ற தவ வலிமையால் இந்திரன் முதலான தேவர்களை வென்று மூவுலகங்களையும் தன் வயப்படுத்தி செருக்கோடு ஆண்டுவந்தான். அரசிழந்து துன்புற்ற தேவர்கள் மகாவிஷ்ணுவைச் சரணடைந்து இழந்த அரசைப் பெறவேண்டு மென்றும், அவனுல் ஏற்பட்ட துன்பம் பொறுக்கமுடியவில்லையென்றும் வேண்டினர். அவர்களுக்கு அபயமளித்த விஷ்ணு, வாமன (குள்ள வடிவமான) அவதாரம் எடுத்தார். வேள்வியின் பொருட்டு அந்தணர்களுக்கு வேண்டியவற்றைத் தானமாகக் கொடுத்துவந்த பலிச்சக்கரவர்த்தியிடம் சென்று தன் சின்னஞ்சிறு காலடிகளால் மூன்றடி மண் கேட்டு நின்ருர். அவனும் கொடுப்பதாக வாக்களித்தான். உடனே விஷ்ணு சிறிய உருவத்தை மாற்றி திரிவிக்கிரமனுக ஓங்கியுலகளந்த பெருமாளாக பேருரு எடுத்தார்! ஓரடியால் பூவுலகத்தையும் மற்ருேரடியால் விண்ணுலகத்தையும் அளந்து மூன்ருவது அடி எங்கே? எனக் கேட்க தன் சிரசே மூன்ரும் அடிக்கு இடம் எனப் பணிய, அவன் சிரசின்மீது கால் ஊன்றி பாதாள உலகத்தில் அழுத்தி அவன் செருக்கையடக்கினுர்.

பரசுராமர் : க்ஷத்திரிய வமிசத்தினரின் கொடுமைகளை ஒடுக்க வேண்டி ஜமதக்கிநி முனிவருக்கும் ரேணுகைக்கும் ராமன் என்னும் பெயரொடு பிறந்து பரசு எனும் கோடாலிப்படை யேந்தி பரசுராமரானுர். தன் தந்தையைக் கொன்றவனுன கார்த்த வீரியார்ச்சுனனையும் அவனுடைய குமாரர்களையும் கொன்றதோடு க்ஷத்திரிய மன்னர் பலரையும் இருபத்தோரு தலைமுறை கொன்று ஒழித்தார்.

தசரதராமர் : இராவணன் முதலான அரக்கர் கூட்டத்தின் தொல்லைகள் எல்லையற்றுப்போகவே தேவர்கள் ஒன்றுகூடி காத்தருளுமாறு மகாவிஷ்ணுவை வேண்டினர். அயோத்தியில் தசரத மன்னனுக்கு மகனுக தசரதராமராக திரு அவதாரம் எடுத்து இராவணன் முதலான ஏராளமான அரக்கர் கூட்டத்தை அழித்து தேவர்களுக்கு அருள்புரிந்தார்.

பலராம கிருஷ்ணர் : துஷ்ட அசுரர் அளவுகடந்து பெருகிவிட்டதால் பூமியின் பாரத்தைச் சுமக்கமுடியாமல் பூதேவி முறையிட, தேவர்களும் வேண்ட வசுதேவ குமாரர்களாக பலராம கிருஷ்ணர்களாகத் தோன்றி அசுரரை அழித்தும், மாபாரதப்போரை முடித்தும் பூமியின் சுமையைக் குறைத்தருளினுர்.

16-ம் பக்கம் பார்க்கவும்

ஐந்தின் பெருமையே அகலிட மாவது
ஐந்தின் பெருமையே ஆலய மாவது
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே.

திருவைந்தெழுந்தின் அளவிலாப் பெருமையினுலேயே எல்லா வுலகமும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. திருவைந்தெழுத்தின் திருக்குறிப்பே சிவபெருமான் திருக்கோவிலாகும். அறவோனுகிய சிவபெருமான் அருள்வதும் திருவைந்தெழுத்தேயாம் திருவைந் தெழுத்தை முறையாகக் கணிப்பாரைக் காக்கும் காவலன் சிவபெரு மானுவன்.

—திருமந்திரம்

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 41, Broadway, Madras-600001. (April-1978)